இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 31-10-2025

# பா.ஜ.க.வின் குடும்ப அரசியல்!

**மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, குடும்ப அரசியலுக்கு எதிராக மார் தட்டி இருக்கிறார். ஒரு குடும்பமே நடத்தி வரும் அரசியல் கட்சிகள் நாட்டுக்குத் தேவையில்லை என்பதை படிப்படியாக நிரூபித்து வருவதாகச் சொல்லி இருக்கிறார்.**

“ஒரு குடும்பத்தினர் மட்டுமே நடத்தி வரும் அரசியல் கட்சிகள் நாட்டுக்குத் தேவை இல்லை என்பதை படிப்படியாக நிரூபித்து வருகிறோம். விரைவில் நாட்டில் குடும்ப அரசியல் கட்சிகளே இல்லாத நிலை ஏற்படும்” என்று சொல்லி புலம்பி இருக்கிறார் அமித்ஷா.

குடும்ப அரசியலைப் பற்றி பேசுவதற்கான தகுதி அமித்ஷாவுக்கோ, பா.ஜ.க.வுக்கோ இருக்கிறதா? இல்லை!

சில நாட்களுக்கு முன்னால் ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிக்கை ஒரு செய்திக் கட்டுரையை வெளியிட்டது. நாட்டிலேயே அதிகபட்சமாக பா.ஜ.க.வில்தான் 387 சட்டப்பேரவை, சட்ட மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாரிசு உறுப்பினர்களாக பதவியில் உள்ளனர் என்று தனது ஆய்வில் தெரியவந்துள்ளதாகச் சொல்கிறது ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ்.

நாடு முழுதும் வாரிசு எம்.எல்.ஏ.க்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த ஆய்வை ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நடத்தி உள்ளது.

**காங்கிரஸ் கட்சியில் 285 பேர் உள்ளனர். சமாஜ்வாதி கட்சியில் 55 பேரும், பா.ஜ.க. கூட்டணி கட்சியான தெலுங்கு தேசம் கட்சியில் 51 பேரும் வாரிசு உறுப்பினர்களாக உள்ளனர். ஐக்கிய ஜனதா தளம் கட்சியில் 28 பேர் வாரிசுகள் என்பது தெரியவந்துள்ளது. மற்ற மாநில கட்சிகளில் 30 பேருக்கும் குறைவாக மட்டுமே உள்ளனர் என்பதும் இதில் சொல்லப்பட்டுள்ளது.**

ஒன்றிய அமைச்சரவையில் வாரிசுகள் 6 பேர் கேபினட் அமைச்சர்களாகவும், 5 பேர் இணை அமைச்சர்களாகவும் உள்ளனர்.

அதிகபட்சமாக பா.ஜ.க.வில் 84 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டு பதவியில் உள்ளனர். அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியில் 73 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வாரிசுகளாக உள்ளனர்.

நாடுமுழுதும் 5,294 பேர் சட்டப்பேரவை, சட்ட மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 1,174 பேர் வாரிசுகள். இதில் 854 பேர் எம்.எல்.ஏ.க்கள், 80 பேர் மேலவை உறுப்பினர்கள், 58 பேர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள், 182 பேர் மக்களவை உறுப்பினர்கள்.

இந்த எண்ணிக்கையிலும் பா.ஜ.க.வினரே அதிகம். **நாட்டிலேயே அதிகபட்சமாக பா.ஜ.க.வில்தான் 387 சட்டப்பேரவை, சட்ட மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாரிசு உறுப்பினர்களாக பதவியில் உள்ளனர். எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் ‘குடும்ப அரசியலில்’ பா.ஜ.க.தான் முதல் இடத்தில் இருக்கிறது.**

முன்பு ஒரு முறை பா.ஜ.க.வின் குடும்ப அரசியல் குறித்து ‘முரசொலி’யில் எழுதி இருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ‘ஜுனியர் விகடன்’ வாரமிருமுறை இதழில் ‘பா.ஜ.க.வின் வாரிசு அரசியல்’ என்ற தலைப்பில் ஒரு செய்திக் கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் பா.ஜ.க. தலைவர்களில் யாரது வாரிசுகள் எல்லாம் அரசியலில் இருக்கிறார்கள் என்று இருக்கிறது.

**★ வேத்பிரகாஷ் கோயல், மத்திய அமைச்சராக இருந்தார். அவரது மனைவி சந்திரகாந்த் கோயல், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர்களது மகன்தான் இன்றைய ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் ஆவார்!**

**★ தேபேந்திர பிரதான், முன்பு ஒன்றிய அமைச்சராக இருந்தார். இவரது மகன்தான் இன்று ஒன்றிய அமைச்சராக இருக்கும் தர்மேந்திர பிரதான்.**

**★ முன்னாள் ஒன்றிய அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் மகனான ஜோதி ராதித்ய சிந்தியா, இன்று ஒன்றிய அமைச்சராக இருக்கிறார்.**

**★ கர்நாடகாவின் முதலமைச்சராக இருந்த எஸ்.ஆர்.பொம்மை அவர்களின் மகன்தான் இன்று கர்நாடக முதலமைச்சராக இருக்கும் பசவராஜ் பொம்மை அவர்கள்.**

**★ இமாச்சலப்பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்தவர் பிரேம்குமார் துமால். இவரது மகனான அனுராக் தாகூர், இன்று ஒன்றிய அமைச்சராக இருக்கிறார்.**

**★ கைலாஷ் விஜய்வர்க்கியா என்பவர் பா.ஜ.க.வின் தேசிய பொதுச்செயலாளராக இருந்தார். அவரது மகன்தான் இன்று மத்தியப் பிரதேசத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் ஆகாஷ் விஜய்வர்க்கியா.**

**★ மத்தியப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த வீரேந்திர சக்லேச்சாவின் மகன் ஓம் பிரகாஷ் சக்லேச்சா இன்று மத்தியப் பிரதேசத்தின் அமைச்சராக இருக்கிறார்.**

**★ ராஜஸ்தான் மாநில முன்னாள் முதலமைச்சரான வசுந்தரா ராஜேவின் மகன் துஷ்யந்த் சிங், இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பாவின் மகன் பி.ஒய். ராகவேந்திரா, இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ மேனகா காந்தி மகன் வருண் காந்தி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ முன்னாள் ஒன்றிய அமைச்சர் சிசிர் அதிகாரியின் மகன்தான் இன்று மேற்கு வங்க மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.**

**★ முன்னாள் ஒன்றிய அமைச்சர் பிரமோத் மகாஜனின் மகள் பூனம் மகாஜன் இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் கல்யாண்சிங்கின் மகன் ராஜ்வீர் சிங், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் மகன் பங்கஜ் சிங், உ.பி.மாநில எம்.எல்.ஏ.வாக இருக்கிறார்.**

**★ முன்னாள் ஒன்றிய அமைச்சர் கோபிநாத் முண்டேவின் மகள் ப்ரீத்தம் முண்டே, நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.**

**★ முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.பி.தாகூரின் மகன் விவேக் தாகூர் மாநிலங்களவை உறுப்பினராக இருக்கிறார்.**

இதுதான் பா.ஜ.க.வின் வாரிசு அரசியல் ஆகும். “இவர்களை எதிர்க்கத்தான் குடும்ப அரசியல் என்று பிரதமர் பேசுகிறாரா? உள்துறை அமைச்சர் சொல்கிறாரா?” என்று முன்பு கேட்டிருந்தோம். அதனைத்தான் இப்போதும் கேட்க வேண்டியதாக உள்ளது.

**அதானி என்ற ஒரு குடும்பத்துக்காக மட்டும் நடத்தப்படும் கட்சிதான் பா.ஜ.க. என்பதை பா.ஜ.க. எம்.பி.க்களே அறிவார்கள்.**

1999 முதல் 31 பா.ஜ.க. தலைவர்களின் வாரிசுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆகியிருப்பதாக ஹார்வே பல்கலைக்கழக ஆய்வு கூறியுள்ளது. முந்தைய மகாராஷ்டிர சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைவர்கள் வாரிசுகள் 28 பேருக்கு தேர்தலில் போட்டியிட பா.ஜ.க. சீட் வழங்கியது. இதெல்லாம் அமித்ஷாவுக்குத் தெரியாதா?

**உள்துறை அமைச்சருக்கு உள்நாட்டுக்குள் என்ன நடக்கிறது என்று தெரியாததைப் போலவே உள்கட்சியில் நடக்கும் குடும்ப அரசியலைத் தெரியாமல் இருக்கிறார்.** ●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.மு.சுமதி அவர்களிடம் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.

### “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின்

# ஒரு இலட்சமாவது பயனாளிக்கு வீட்டிற்கான சாவி !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**தென்காசி, அக்.31-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.மு.சுமதி அவர்களிடம் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.**

### “கலைஞரின் கனவு இல்லம்” திட்டம்

நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்குப் மாற்றாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2010 ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை எய்திடும் வகையில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் ‘குடிசையில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித் தர தமிழ்நாடு அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நிலையான கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற கனவுடன் வாழும் ஊரக ஏழைக் குடும்பங்களின் கனவினை நிறைவேற்றும் வண்ணம் இத்திட்டம் அறிவிக்கப்பட்ட 2024-25 ஆம் ஆண்டிலேயே ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டது.

கணக்கெடுப்பின் மூலம் ஏற்கனவே கண்டறியப்பட்ட பயனாளிகளின் தகுதித்தன்மையை உறுதி செய்து அப்பயனாளிகளுக்கு இத்திட்டதின் கீழ் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர மேற்கண்ட கணக்கெடுப்பில் இடம் பெற்று வீடு கட்டுவதற்கு நிலம் இல்லாத பயனாளிகளுக்கு பட்டா வழங்கியும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வழங்கியும் வீடற்ற, நிலமற்ற பயனாளிகளின் கனவை இத்திட்டம் நிறைவேற்றியுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கான நோக்கம் மற்றும் திட்டத்தின் பயன்கள் விரைந்து மக்களை சென்றடையும் பொருட்டு “பயனாளிகள் தேர்வு செய்தல் முதல் தொகை விடுவித்தல்” வரையிலான அனைத்து நடைமுறைகளும் இணையம் வழியாக மேற்கொள்ளப்பட்டதால் தகுதியான பயனாளிகள் வீட்டினை விரைந்து கட்டி முடித்திட சாத்தியமானது. தமிழ்நாடு அரசு இதற்காக முனைப்புடன் செயல்பட்டதால் இத்திட்டம் பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. அதனால் 2024-25 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளும் ரூ.3500 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்ட ஓராண்டிற்குள்ளேயே ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பொருட்டு நேற்று முன்தினம் தென்காசியில் நடைபெற்ற அரசின் விழாவில், முதலமைச்சர் அவர்கள் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.மு.சுமதி அவர்களிடம் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.

இதேபோன்று, 2025-26ஆம் ஆண்டில், மேலும் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, இதுநாள் வரை 16,245 வீடுகள் உடனடியாக முடிவுறும் நிலையிலும், 83,755 வீடுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தி லும் இருந்து வருகின்றன. இவை அனைத்தும் 2025-26 ஆம் நிதியாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி. கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், த.மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ராபர்ட் புரூஸ், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா, அப்துல் வஹாப், சதன் திருமலைக்குமார், திரு.பழனி நாடார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் பா. பொன்னையா தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், சார் ஆட்சியர் திருமதி வைஷ்ணவி பால், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நீலப் பொருளாதாரத்தை உயர்த்த தமிழ்நாடு உறுதி பூண்டுள்ளது

# கடல்சார் துறையில் முதலீடுகளுக்கு தரமான உள்கட்டமைப்பை உறுதிப்படுத்தி வருகிறோம்!

## மும்பையில் – உலகளாவிய இந்திய கடல்சார் வார விழாவில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

மும்பை, அக். 31-

மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் நடைபெற்ற “உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா - 2025” (India Maritime Week - 2025) நிகழ்வில், தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டுசிறப்புரையாற்றினார்.

மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் 27.10.2025 முதல் 31.10.2025 வரை நடைபெற்று வரும் உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா - 2025 (India Maritime Week 2025) நிகழ்வில், தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்எ.வ.வேலு, நேற்று முன்தினம் (29.10.2025) கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார்கள். தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் கலந்து கொண்டார்.

தமிழ்நாட்டின் சார்பாக, சென்னை & காமராஜர் துறைமுகத்தின் தலைவர் சுனில் பாலிவால், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், தமிழ்நாடு கடல்சார் வாரியத் துணைத் தலைமைச் செயல் அதிகாரி டி.என்.வெங்கடேஷ், தமிழ்நாடு கைடன்ஸ் மேலாண்மை இயக்குநர்/ தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் தாரேஸ் அஹமது, சென்னை துறைமுக துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன், JSW இணை மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாக அதிகாரி ரிங்கேஷ் ராய், மஹதி குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் ரவிஷங்கர், Waterways Wat Leisure Tourism, பொது மேலாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி யூர்கென் பைலம், ஹூண்டாய் மோட்டார்ஸ் பொது மேலாளர் கார்த்திக் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:

இந்திய கடல்சார் வாரம் - 2025 விழாவில் தலைமையேற்று நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கு, மிகுந்த நன்றியையும், பெருமையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த விழா, இந்தியாவின் கடல்சார் துறையின் வலிமையையும், வளர்ச்சி பாதையையும் உலகிற்கு வலியுறுத்தும் ஒரு முக்கிய மேடையாகும். 100க்கும் மேற்பட்ட கடல்சார் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த விழாவில், தமிழ்நாடு தனது தனித்துவமான கடல்சார் உள்கட்டமைப்பையும், வர்த்தக திறனையும் உலகிற்கு காட்டும் ஒரு அரிய வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறது என்றும், 1,069 கிலோ மீட்டர் நீளமான கடற்கரை எல்லையுடன் இந்தியாவின் மிக நீண்ட கடற்கரையை கொண்டுள்ள 2ஆவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், கடல்சார் வர்த்தகத்திற்கு இன்றியமையாதவையாக விளங்கும்; 3 முக்கிய பெருந்துறைமுகங்களும், (சென்னை, தூத்துக்குடி மற்றும் எண்ணூர்), 17 சிறுதுறைமுகங்களும், தொழிற் பூங்காக்களும் உள்ளன என்றும், அண்டை நாடான இலங்கைக்கு வெகு அருகாமையில் இருப்பதால், சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி, மீன்பிடித் துறைமுகங்கள், கடல் உணவு பதப்படுத்துதல், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் கடல்சார்ந்த சுற்றுலாத் துறை மேம்பாடு, பன்னாட்டு பயணியர் கப்பல் போக்குவரத்து போன்றவைகளில் தமிழ்நாட்டை ஒரு முக்கிய மையமாக மாற்றியுள்ளன என்றும் தெரிவித்தார்.

பண்டைய சோழப்பேரரசு காலத்திலிருந்தே பூம்புகார் மற்றும் மாமல்லபுரம் துறை முகங்கள் மூலமாக, உலக நாடுகளுடன் கடல்வணிகம் செய்த வரலாற்றினை தமிழ்நாடு பெற்றுள்ளது. தற்போது, இந்தியாவின் ‘சாகர்மாலா’ போன்ற முன்னோடியான திட்டங்கள் மூலம் துறைமுகங்களின் மேம்பாடு மற்றும் தொழில்துறையின் வளர்ச்சியில் இந்தியா முன்னணி நாடாக மாறி வருகிறது என்பதை எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு உகந்த சூழ்நிலையினை பயன்படுத்தி, உள்நாட்டு கப்பல் கட்டுதலை ஊக்குவிக்க, தூத்துக்குடி மற்றும் கடலூர் துறைமுகங்களை பயன்படுத்தும் வகையில் முக்கிய முயற்சிகளை மேற்கொண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டு செயல்பட தொடங்கி விட்டது என்பதை தெரிவித்தார்.

சமீபத்தில் சென்னையில் 18.9.2025 அன்று நடைபெற்ற நீல பொருளாதார மாநாடு - 2025இல், தமிழ்நாடு தனது கடல்சார் வாய்ப்புகளை முழுமையாக காட்சிப்படுத்தி, முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதத்தில், பல புதிய ஆலோசனை களை முன்வைத்தது. இந்த முயற்சியை, இந்திய கடல்சார் வாரியம் - 2025 விழாவின், ஒரு தொடர் பகுதியாகவே மாறியுள்ளது என்றும், “ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம்” என்ற இலக்குடன் பயணித்து வரும் தமிழ்நாடு அரசு, தனது கடல் சார் வர்த்தகம் மற்றும் தொழில் துறையை மேம்படுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதை எடுத்துரைத்த அமைச்சர் , கடல் சார்ந்த வளங்களை திறன் வாய்ந்த வகையில் பயன்படுத்தி, நிலையான வேலை வாய்ப்பு, வாழ்வாதார மேம்பாடு போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், பெரும்பங்கு வகிக்கும் நீலப்பொருளாதாரத்தை உயர்த்த தமிழ்நாடு உறுதி பூண்டுள்ளது என்றும், தமிழ் நாட்டில் கடல்சார் துறையில் முதலீடுகளுக்கு தரமான உள்கட்டமைப்பு, திறமையான மனிதவளம், நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய தொழில் சூழல் இவற்றை நாம் உறுதிப்படுத்தி வருகிறோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தனியார் முதலீட்டுடன் கடலூர் துறைமுகத்தை 40 ஆண்டுகளுக்குப் பிறகு இயக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இராமேஸ்வரம் தீவுப் பகுதியை கடல் மார்க்கமாக சுற்றிவர படகுப் போக்குவரத்து துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இராமேஸ்வரம் (இந்தியா) தலைமன்னார் (இலங்கை) இடையே குறைந்த தூர பன்னாட்டு கப்பல் போக்குவரத்து துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாள சுமார் 8 கிலோ மீட்டர் நீளம் கொண்ட அணுகு தோணித் துறை உடன்குடியில் அமைக்கப்பட்டு, விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது என்றும், கடலூரில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரங்கம்பாடி - நாகப்பட்டினம் வேளாங்கண்ணி இடையே பயணிகள் படகு போக்குவரத்து துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்க, சென்னையில் தொடர்ந்து, பன்னாட்டு முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தியுள்ளார்கள். மேலும், அவரே பல்வேறு உலக நாடுகளுக்கும் நேரடியாக சென்று, முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழ் நாட்டில் தொழில் துவங்க அழைப்பு விடுத்தும் வருகிறார். இந்தியாவிலேயே தொழில் துவங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பல்வேறு உலக நாடுகளில் இருந்து வந்துள்ள முதலீட்டாளர்களை, தமிழ் நாட்டின் வளர்ந்து வரும் கடல்சார் சூழ்நிலையை ஆராய்ந்து, இணைந்து பயணிக்க அமைச்சர் அழைப்பு விடுத்தார்கள். இந்தியாவை உலகின் கடல்சார் மையமாக மாற்றும் மாபெரும் பயணத்தில், தமிழ்நாடு உறுதுணையாக இருந்து, முன்மாதிரியாக செயல்படும் உறுதியுடன் இருக்கிறது என்று, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்கள்.

இந்தியாவின் கடல்சார் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையில், தமிழ்நாட்டை மையப்படுத்தி இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்த ஒன்றிய அரசின் அதிகாரிகளுக்கும், ஒன்றிய அமைச்சர் சர்பானந்தா சோனாவால் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.




மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் நடைபெற்ற உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா – 2025 (India Maritime Week 2025)வில் தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (29.10.2025) கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.